1977 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 8-8-1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 9-8-1977, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-8-1977, புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினான்குக்கு மேற்படுமாயின் 12-8-1977, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(இ) அவைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவையின் 221 (ஆவது விதியின்கீழ் 1977-78-ஆம் நிதியாண்டுக்கு அவைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும் பதிமூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவை தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஈ) அவைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு

ஒற்றைமாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவைக் குழுவிற்கு (House Committee) பதிமூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 8-8-1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 9-8-1977, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-8-1977 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிச்கைக்கு, அதாவது பதிமூன்றுக்கு மேற்படுமாயின் 12-8-1977, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

5. ஒழுங்குப் பிரச்சினை

வினா எண் 5-இன்கீழ் துணை வினாவிற்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த விடை குறித்து

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப்பிரச்னையை நான் இங்கு எழுப்ப விரும்புகின்றேன். கேள்வி நேரத்தின் பொழுது தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா—மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளில் இருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா—என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி எழுப்பிய நேரத்தில் அதன் தொடர்ச்சியாக தொழிலாளர் நல அமைச்சர் அளித்த பதிலில் ஏற்கனவே இருந்த கழக அரசு * என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரத்தோடு அதைச் சொன்னார்கள் என்பது விளக்கப்பட வேண்டும். ஏனென்றால், நிதிநிலை அறிக்கையில் பற்றுக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகிற நேரத்தில், துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கை என்று சொல்லப்படுகின்ற காரணத்தாலேயே * * பொருள் அல்ல. எனவே, ஏற்கனவே இருந்த அரசு * * என்ற குற்றச்சாட்டு மிகவும் மிகவும் பயங்கரமான குற்றச்சாட்டாகும். அப்படி * * அந்தக் காரணத்தைக் காட்டிக் கூட ஓர் அரசைக் கலைக்க முடியும். ஆனால் கழக அரசைக் கலைத்த டெல்லியிலுள்ள மத்திய அரசுகூட அப்படிப்பட்ட ஒரு காரணத்தை அப்பொழுது குறிப்பிடவில்லை. எனவே, அந்தப் பயங்கரமான குற்றச்சாட்டு உரிமைப் பிரச்னைக்கே கூட உரிய ஒன்றாகும். அதை உரிமைப் பிரச்னையாக நான் எழுப்பாமல் தங்களுடைய மேலான முடிவிற்கு விடுகின்றேன். தங்களுடைய கருத்து என்ன, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்பதை அறிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.